©
GOVERNMENT OF TAMIL NADU
2013

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**EXTRAORDINARY** PUBLISHED BY AUTHORITY

No. 293] CHENNAI, WEDNESDAY, OCTOBER 9, 2013
Purattasi 23, Vijaya, Thiruvalluvar Aandu–2044

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

**COLLECTORS AND LOCAL AUTHORITIES**

**மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர், திண்டுக்கல் மாவட்டம்.**

**திண்டுக்கல் மாவட்டம், பழனி ஊராட்சி ஒன்றியம், பாப்பம்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க. எண் 3899/2012/அ4)*

**No. VI(2)/213(a-1)/2013.**

திண்டுக்கல் மாவட்டம், பழனி ஊராட்சி ஒன்றியம், பாப்பம்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் திரு. கா. கர்ணன் என்பவர் விதிமுறைகளுக்கு முரணாக செயல்பட்டு, ஊராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுத்தியதன் பேரில் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 (1994 ஆம் ஆண்டின் 21–வது சட்டம்) பிரிவு 205, உட்பிரிவு (11)–ல் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி திண்டுக்கல் மாவட்டம், பழனி ஊராட்சி ஒன்றியம், பாப்பம்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் திரு. கா. கர்ணன் என்பவரை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205–ன்கீழ் வரையறுக்கப்பட்ட நடைமுறைகளை வழுவாது பின்பற்றி பாப்பம்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து 2013–ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 7–ஆம் தேதி முதல் நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இந்த அறிவிக்கை 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப் பிரிவு 262 (1)–ன்படி ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் தேதியில் இருந்து நடைமுறைக்கு வரும் என தெரிவிக்கப்படுகிறது.

**திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம், பாளையங்கோட்டை ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க. எண் 3643/2012/அ3)*

**No. VI(2)/213(a-2)/2013.**

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம், பாளையங்கோட்டை ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி. பா. சுமதி என்பவர் விதிமுறைகளுக்கு முரணாக செயல்பட்டு, ஊராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுத்தியதன் பேரில் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 (1994 ஆம் ஆண்டின் 21—வது சட்டம்) பிரிவு 205, உட்பிரிவு (11)—ல் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம், பாளையங்கோட்டை ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி. பா. சுமதி என்பவரை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205—ன்கீழ் வரையறுக்கப்பட்ட நடைமுறைகளை வழுவாது பின்பற்றி பாளையங்கோட்டை ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து 2013—ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 7—ஆம் தேதி முதல் நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இந்த அறிவிக்கை 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப் பிரிவு 262 (1)—ன்படி ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் தேதியில் இருந்து நடைமுறைக்கு வரும் என தெரிவிக்கப்படுகிறது.

திண்டுக்கல்,
2013 அக்டோபர் 9.

**ந. வெங்கடாசலம்,**
*மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்*
*ஊராட்சிகளின் ஆய்வாளர்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU